மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டம் என்பதனால் சமூக நலத்துறை இப்போதுதான் அங்கே முழுமையாக தன் வேலைகளை துவங்கி அதற்குரிய பயிற்சிகள் அனைத்தும் அளித்துக் கொண்டிருக்கிறது. ஊட்டச் சத்து திட்டம் அங்கே நிறைவேற்றப்பட்டு விட்டால், இப்படிப்பட்ட குறைகளே இல்லாத அளவிற்கு வந்து விடும். எதிர் காலத்தில் ஊனமுற்ற, மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் இல்லாத அளவுக்கு அந்த மாவட்டம் வந்து விடும். ஆனால் இப்போதும் கூட அந்த மாவட்டத்தில் மன வளர்ச்சி குன்றியவர்களுக்காக சிறப்பு பள்ளி ஒன்று செயல்பட்டு வருகின்றது. மூன்று கட்டங்களில் 24 மன வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு சிறப்பு கல்வி அளிக்கப்படுகிறது. தேவைப்பட்டால் தொண்டு நிறுவனங்கள் முன் வந்தால் அவர்களுக்கு முழு உதவி அளிப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 216, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

216—

விழுப்புரத்தில் வேலை வாய்ப்பு அலுவலகம் அமைத்தல்.

***24953**—*திரு. சி. இராமசுவாமி* :

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தை விழுப்புரத்திற்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், சங்கராபுரம் புதிய தாலுகாவாக உருவாகி உள்ளதால், வேலைவாய்ப்பு அலுவலகம் அங்கேயே செயல்பட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சங்கராபுரத்திலுள்ள துணை வேலைவாய்ப்பு அலுவலகம், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் புதிதாகத் தொடங்கப்பட்ட விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்துடன் இணைக்கப்பட்டு 30-9-1993 முதல் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) இல்லை.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரத்தில் இருந்த வேலை வாய்ப்பு அலுவலகத்தினை விழுப்புரத்திற்கு மாற்றி விட்டார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சங்கராபுரத்தை தனி வட்டமாக ஆக்கி, சங்கராபுரத்தை தொழில் துறையில் பின் தங்கிய மாவட்டம் என, இன்டஸ்ட்ரியலி பேக்வேர்ட் தாலுக்காவாக ஆக்கி சங்கராபுரம் மக்களுக்கு மகிழ்ச்சியை கொடுத்தார்கள். அதே நேரத்தில் அந்த மாவட்டத்தைப் பிரித்ததும் சங்கராபுரத்தில் இருந்த வேலை வாய்ப்பு அலுவலகத்தை விழுப்புரத்திற்கு மாற்றி விட்டார்கள். எனவே விழுப்புரத்திற்கு மாற்றப்பட்ட அந்த வேலை வாய்ப்பு அலுவலகத்தை மீண்டும் சங்கராபுரத்திற்கு கொண்டு வர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரத்திலும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் இருக்கிறது. ஆனால் சங்கராபுரம் ஒரு தாலுக்காவாக இருக்கிற காரணத்தால் அரசால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலையில் வாழும் மலை வாழ் மக்கள் எல்லாம் சங்கராபுரத்தில் இருந்த வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்ய வாய்ப்பாக இருந்தது. 10 கிலோ மீட்டர் தூரம் சென்று அவர்கள் பதிவு செய்ய வாய்ப்பாக இருக்கும். இப்பொழுது விழுப்புரத்திற்கு மாற்றி விட்டதால் 100 கிலோ மீட்டருக்கு மேல் அந்த மலை வாழ் மக்கள் வர வேண்டியிருப்பதால் அவர்களுக்கு ஏற்படும் சங்கடங்களை தவிர்ப்பதற்காகவும் சங்கராபுரம் தொகுதி மக்களுடைய நலனைக் கருத்தில் கொண்டும் விழுப்புரத்திற்கு மாற்றிய வேலை வாய்ப்பு அலுவலகத்தை மீண்டும் சங்கராபுரத்திலேயே துவங்க அரசு முன் வருமா? இல்லையென்றால் வேறு ஒரு வேலைவாய்ப்பு அலுவலகத்தையாவது அங்கு துவங்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரத்திற்கும் விழுப்புரத்திற்கும் ஏறக்குறைய 80 கிலோ மீட்டர் தூரம் தான் இருக்கிறது. சாலைகள் மற்றும் போக்குவரத்து வசதி இந்தக் காலக் கட்டத்தில் நல்ல முறையில் இருக்கிறது. இருந்தாலும் அங்கே சங்கராபுரத்தில் பழங்குடியினருக்கான தொழில்முறை வழிகாட்டும் நிலையம் தொடர்ந்து சங்கராபுரத்தில் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 217, திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.